சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு ம.ஹரிஹரன், த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு என்.மணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண்.18

நாள் : 25.05.2021
பிலவ, வைகாசி 11,
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் எண். எஸ் 10(3)/27535/2020, நாள் 05.12.2020 மற்றும் 15.02.2021.

.-----

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையில் மின் உபகோட்டம்–5, சென்னை அலுவலகத்தில் உதவியாள் தரம்–2 ஆக பணிபுரிந்து வந்த திரு என்.மணி என்பவர் பணியிலிருக்கும் போது கடந்த 06.10.2006 அன்று காலமானதையடுத்து, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் அவரது வாரிதாரர்/ மகனான திரு ம.ஹரிஹரன், என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அலுவலகத்தில் 27.02.2020 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பிறந்த தேதி 20.09.1991 என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பினை மார்ச் 2006–ல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தனியரின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 27.02.2020 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திரு ம.ஹரிஹரன் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 27.02.2020 முற்பகல் முதல் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.4362/ட்டி.1/2021, நாள் 04.03.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண் 7904/ஜி.1/2021–1, நாள். 22.03.2021–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.மணிவாசன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.

✓திரு ம.ஹரிஹரன், இளநிலை உதவியாளர். (முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5 வழியாக)

மாநில கணக்காயர், சென்னை –18.

<u>நகல்:</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை– 9.

இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

முதபொ நீஆது ம தபொ (பொது) அலுவலகம் பொபது, சேப்பாக்கம், சென்னை-5.

எண் 10 (ஆ)/ 27535/2020/ நா. 13.07/2021

" உரியவருக்கு வழங்கப்படுகிறது"

பெறுநர் :-
திரு. ம. ஹரிஹரன், இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்.

ஆட்சி அலுவலர்
முதன்மை தலைமைப் பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம், சேப்பாக்கம், சென்னை—600 005.